REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

திமுகழகத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

அமைச்சரின் மரண தண்டனை ஊர்ஜிதம்!

பாரசீகத்தின் முன்னாள் அமைச்சரான டாக்டர் உசேன் பதேமிக்கு, முன்னாள் ஷாவிற்கு எதிராக சதி நடத்தியதாகவும், முடியாட்சியை வீழ்த்த முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டி இராணுவ நீதிமன்றம் அளித்த மரண தண்டனையை, பாரசீக இராணுவ அப்பீல் நீதிமன்றம் உறுதி செய்துவிட்டது.

சென்ற ஆண்டில் ஷாவிற்கு எதிராகக் கலகமூட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட டாக்டர் அலி ஷாயகானுக்கு தண்டனையை பத்து ஆண்டுகாலமாக அதே நீதிமன்றம் குறைத்தது.

சர்க்கார் எதிர்ப்பு வேலைகள், வேவு பார்ப்பது போன்ற குற்றங்களுக்காக கம்யூனிஸ்டு அதிகாரிகள் 12 பேருக்கு அளிக்கப்பட்ட தண்டனையையும் மேற்படி நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

மலர் 2] சென்னை: ஐப்பசி 14உ சனி (30—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 15உ ஞாயிறு (31—10—54) [இதழ் 119

'அரிசன ஆலய நுழைவு வெறும் நேரக்கேடு'

அண்ணா மீது வழக்கு?

'தின மலர்' தரும் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, மற்றும் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ப. ஜீவானந்தம் ஆகியோரும், திருவாங்கூரிலுள்ள தமிழ்ப் பகுதிகள், தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டும் எனபோராட்டம் நடத்தியதற்காக திரு-தமிழர் காங்கிரஸ்மீது, திரு-கொச்சி அரசாங்கம் தொடர்ந்துள்ள வழக்குகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தகவல் கிடைத்துள்ளதாக, திருவனந்தபுரத்திலிருந்து வெளிவரும் தமிழ் நாளிதழான 'தின மலர்' செய்தி ஒன்று வெளியிட்டுள்ளது.

மற்றும், திரு—தமிழகத்திலுள்ள பல தோழர்கள்மீதும், ஆங்காங்குள்ள போலீசார் பல புதிய புதிய வழக்குகளைத் தொடுத்துவருவதாகவும் அந்த இதழ் கூறுகிறது.

'புரட்சிப் படை'யின் புத்திசாலித்தனம்!

தேவதையின் கோபம் தணிய வெள்ளைக்கார மத குருவை உயிரோடு புதைத்துவிட்டனர்!

நைரோபி (கென்யா)— பிரிட்டிஷ் இராணுவ நடவடிக்கைகள் மேலும் மேலும் மும்முரமாகிக் கொண்டே வருவதால் மாவ் மாவ் இயக்கத்தினரான பயங்கரவாதிகளின் வெளி நடமாட்டம் இப்போது மிகவும் குறைந்துவிட்டது.

இதுபற்றி அவ்வியக்கத்தவர் விசாரணை செய்கையில், 'இந்த நிலைகளுக்குக் காரணம், அங்குள்ள தேவதையின் கோபமே,' என்று கூறி, பில்லி சூனியங்களாகிய வேலைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

தேவதையின் இந்தக் கோபத்தைத் தணிப்பதற்காக, அருண்டேல் லீக்கி எனும் 70 வயதுடைய வெள்ளைக்கார மத குருவை பிடித்திழுத்துக் கொண்டு வந்து, ஆழமாகத் தோண்டப்பட்டிருந்த ஒரு குழியில் தள்ளி உயிரோடு அப்படியே புதைத்துவிட்டார்களாம்!

இந்தச் சம்பவத்தை நடத்திய பிறகு, உடனே தேவதையின் கோபந்தணிந்து விட்டது என்பதாகக் கூறி, அவ்வைபவத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடியிருக்கிறார்கள்!

★

பட்டம் தாணுவுக்கு இடக் கரத்தை காணிக்கை தந்தவர்!

நெய்யூர், அக். 25— கடந்த ஆகஸ்ட் 11-ந் தேதி புதுக்கடையில் திரு-கொச்சி போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திற்கு தனது இடக்கரத்தைப் பலியாகத் தந்த தோழர் வெள்ளையன், நெய்யூர் லண்டன் மிஷன் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்தார். அவர் நேற்றுமாலை குழித்துறை போலீஸ் கொட்டடிக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது.

இதே மருத்துவமனையில் துப்பாக்கிக் காயங்களுக்குட்பட்ட வேறு நால்வரும், ஏற்கனவே குழித்துறை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டுவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'அதிக முக்கியத்துவத்தை நான் அதற்குக் கொடுப்பதில்லை'

சீன கொரில்லாப் படைகள்!

ஐ. நா. - வின் முடிவு!

"பர்மாவில் இன்னும் இருந்து வரும் தேசீய சீன கொரில்லாப் படைகள், தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கவோ, அல்லது தாங்கள் சிறைப்படவோ ஒப்புக்கொள்ள வேண்டும்; இவ்விரண்டில் ஏதாவது ஒன்றுக்குப் பணிய அப்படைகள் தயாராக இருக்கவேண்டும்," என்று, ஐ. நா. சபையின் சிபாரிசு ஒன்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டதில், சபையிலுள்ள மொத்தம் 60 நாடுகளில் 56 நாடுகள் அத்தீர்மானத்தை ஆதரித்து வாக்குச் செய்துள்ளனவாம்.

லாவோஸ், காம்போடியா ஐ. நா.-ல் சேரும்?

லாவோஸ், காம்போடியாவை ஐ. நா.-ல் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆஸ்திரேலியாவின் தீர்மானம் ஒன்றை பாகிஸ்தானும், தாய்லாந்தும் ஆதரித்துள்ளனவாம். இந்தக் கோரிக்கை ஐ. நா. விசேட அரசியல் குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனத் தெரியவருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவரும், ஜெர்மன் சான்ஸலர் டாக்டர் அடினாரும், ஜெர்மனி பற்றிய 4 வல்லரசுகளின் பேச்சு வார்த்தைகள் நடத்த ரஷ்யா விடுத்த அழைப்பில் புதிதாக ஒன்றுமில்லை என்று கூறி, அதை நிராகரித்து விட்டார்களாம்!

'வருண ஏற்பாடு உள்ளவரை தீண்டாமை நிலைத்திருக்கும்'

அமைச்சர் ஜகஜீவன்ராம் முழக்கம்

"வருண ஏற்பாடு உள்ளவரை தீண்டாமையும் நீடித்திருக்கும்."

அரிசனங்கள், மற்றவர்களிடம் நேர்மையான நடத்தையைத்தான் எதிர்பார்க்கிறார்களே அல்லாமல், சலுகை எதையும் எதிர்பார்க்கவில்லை. அநீதி துடைக்கப்பட்டு, தங்களுக்கு ஏதாவது நல்ல நிலை ஏற்பட வேண்டுமென்றுதான், அரிசனங்களும் மற்ற ஷெட்யூல் வகுப்பினரும் கருதுகின்றனர். தீண்டாமை பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் இந்திய விடுதலைக்கு ஆபத்து உண்டாகும்."

"சட்டங்கள் இயற்றப்பட்டும், சில தனிப்பட்டவர்கள் நற்பணி புரிந்திருந்துங்கூட இன்னும் தீண்டாமை இருந்து வருகிறது. கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள கிணறுகளில் எத்தனை, அங்குள்ள மக்கள் அனைவரும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நாடு முழுவதிலும், ஒரு டஜன் அல்லது இரண்டு டஜன் கிணறுகளேதான், இந்து மதத்தைச் சேர்ந்த அனைவரும் உபயோகப்படுத்திக்கொள்ளும் வகையில் இருக்கும் என்பதை, நான் துணிந்து கூறுகிறேன். இந்தியாவிலும்கூட, தீண்டாமை மாய்ந்துவிட்டதாக மக்கள் உரைக்கின்றனர்."

ஆலய நுழைவுப் பிரச்சினை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், இப்பிரச்சினைக்கு நான் அதிக முக்கியத்துவம் காட்டுவதில்லை. விஸ்வநாதர் கோயில் முன்பு சில நண்பர்கள் அறப்போர் தொடுத்தனர். அது வெறும் காலக்கேடு. தொழுவதற்காகச் செல்லும் ஒருவனால் அக்கடவுளர்கள் தீட்டுப்பட்டுவிடுவர் என்ற தன்மையில், இந்துக் கடவுளர்கள் ஆற்றல் அற்றவர்களாக இருப்பார்களானால், 'இந்தக் கடவுளர்களிடமிருந்து கடவுள் நம்மைக் காப்பாற்றட்டும்' என்றே நான் சொல்லுவேன்."

"சில காலங்களில் நான் கோயிலுக்குப் போவதெல்லாம் ஷெட்யூல் வகுப்பினரின் விமோசனத்திற்காக அல்லவே அல்ல; ஆனால் அக்கடவுளர்களின் விமோசனத்திற்காகவேதான்!

இந்த ஆலய நுழைவு விவகாரத்தை உயர் ஜாதி இந்துக்களின் மனப்பாங்கிற்கே விட்டுவிடுவதே எனது வழக்கம்."

பெங்களூரில் நடைபெற்ற அரிசன மாநாட்டைத் துவங்கிவைத்த காலை, இந்தியப் பேரரசு போக்குவரத்து அமைச்சர் ஜகஜீவன்ராம், மேற்குறிப்பிட்டுள்ளவாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:—

தீண்டாமையும், வகுப்பு ஏற்பாடும் தொலைய வேண்டுமென்பதற்காக உத்தமர் காந்தியார்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆந்திரா—ஓரியா மொழி சிக்கல்!

பயங்கர ஆயுதங்களுடன் ஆந்திரர் ஆர்ப்பாட்டம்!

ஒரிசாவிற்குப் புகை வண்டி செல்லத் தடை; புறப்பட்ட இடத்திற்கே திரும்பியது!

விசாகை, அக். 29—

ஆந்திர—ஒரிசா எல்லை மொழி, முதலியன விஷயமாக, இரு மொழி மக்களிடையிலும், சிலகாலமாக மனப்புழுக்கம் இருந்து வருகிறது. அந்தக் கசப்பு, இருந்தாற்போல் இருந்து வெடித்துக் கிளம்பி இருக்கிறது.

பாதபட்டினம் என்பது ஆந்திர எல்லையிலும், அதற்கு இரண்டு கல் தொலைவில் உள்ள பர்லாகிமிடி ஒரிசா எல்லைக்குள்ளும் இருக்கின்றன. அப்பகுதியில் ஆந்திரமும், ஒரியா மொழியும் வழக்கத்தில் உள்ளது.

நவபாதா—பர்லாகிமிடி பிரயாணப் புகைவண்டியை, கங்காவதா என்ற புகைவண்டி நிலையத்தில், கொடிய ஆயுதங்களைத் தாங்கிய சுமார் 400 ஆந்திரர்கள், மேற்கொண்டு செல்லவிடாமல் தடுத்துவிட்டனர். பர்லாகிமிடிக்கு மேற்படி புகைவண்டியை ஓட்டிச் செல்ல முயற்சித்தால், வண்டியின் 'கார்ட்'டைக் கொன்று போடுவதாகக்கூட்டத்திலிருந்தவர்கள் அச்சுறுத்தினர் எனக் கூறப்படுகிறது.

அதற்குப் பயந்து அப்பிரயாண புகைவண்டி, வந்தவழியே நவபாதா ஜங்ஷனுக்குக் கொண்டுவரப்பட்டு; ஏறி இருந்த பிரயாணிகள் அனைவரும் இறக்கப்பட்டுவிட்டார்களாம்.

★

கஞ்சம், அக். 29— பர்லாகிமிடி என்ற இடத்தில் இரண்டு நாடகங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்று தெலுங்கு; மற்றொன்று ஒரியா. நாடகம் முடிந்தவுடன் சிலர் தெலுங்கு நாடகமே சிறந்ததாக இருந்தது என்றனர். இன்னும் சிலர் ஒரிய நாடகமே சிறந்ததாக இருந்தது என்று பதில் தந்தனர்.

இப்படி வாய்ச் சண்டையில் ஆரம்பித்து ஒரு பெரிய கலகமே உருவாகிவிட்டிருக்கிறது. இதனால் சிலர் கொல்லப்பட்டதாகவும் நடைபெற்ற அடிதடியினால் பலர் படுகாயமுற்றதாகவும் தகவல் கிடைத்துள்ளது. அதிகார பூர்வமான அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதற்கிடையில், சத்ராபூர், கட்டாக் முதலிய இடங்களிலிருந்து இராணுவப் போலீசும், ரிசர்வ் போலீசும் ஏராளமாக வரவழைக்கப்பட்டுள்ளன.

கஞ்சம் மாவட்ட நீதிபதியும், பெர்காம்பூர் உதவி நீதிபதியும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து முகாம் செய்துள்ளனர். உயர்தர போலீஸ் அதிகாரிகளும் நிலைமை மேலும் முற்றிவிடாதிருக்கும்படி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர் எனத் தெரிகிறது.

இங்கிலாந்து—சீன ராஜியத் தொடர்பு!

செஞ்சீனா—இங்கிலாந்து நாட்டிற்கான முதல் தூதுவராக ஹூவான்-சயாங் என்பவர், இரு நாடுகளின் இராஜிய உறவுகளை அதிகார பூர்வமாகப் புதுப்பித்துக் கொள்ளும் வகையில் லண்டன் வந்து சேர்ந்தார்.

அவரை விமான நிலையத்தில் பிரிட்டனின் வெளிநாட்டிலாகா அதிகாரிகள், சோவியத் தூதுவர் முதலானோர் சென்று வரவேற்றனர்.

ஹூவான்-சயாங் தன்னுடன் ஒரு முதல் செயலாளரையும், இரு சான்சலர்களையும் அழைத்து வந்திருப்பதாகத் தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 30—10—1954 சனி

தாயைப் போல மகள்!

‘தாயைப் போல மகள், நூலைப் போல சேலை’ என்பது முதுமொழி. தாயிடம் காணப் பெறும் குறைவு நிறைவுகள் அவள் வயிற்றில் பிறந்த பெண்ணிடத்தும் தொடர்ந்திருக்கும் என்பதுதான், மேற்குறித்துள்ள பழமொழியின் உட்பொருள்.

அகில இந்திய காங்கிரசிற்கும், அதன் கிளைகளாக உள்ள மாநில காங்கிரஸ் அமைப்புகளுக்கும் உள்ள உறவு, தாய்-மகள் முறையேயாகும். எனவே, தாயின் போக்கு, அவளின் மகளிரிடத்திலும் பிரதிபலித்து நிற்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. அவவாறு, தாயின் போக்கிற்கொப்ப, அவள் மகளிர் போக்கும் இருப்பதில் வியப்புமில்லை.

இந்தியத் துணைக்கண்டத்தை, மொழிவழியில் மாநிலங்களாகப் பிரித்து, மாநிலங்களைத் திருத்தியமைக்க வேண்டுமென்பது அகில இந்தியக் காங்கிரசின் பல ஆண்டுகாலக் கோரிக்கையாகும். அக்கோரிக்கைக்கிணங்க, தனது கட்சி அமைப்பையும், மொழியை மூலமாகக் கொண்டு உருவாக்கிக் கொண்டிருக்கிறது, அகில இந்தியக் காங்கிரஸ்.

மொழியை ஒருபொருட்டாகக் கொண்டு இப்பொழுதுள்ள மாநில அமைப்புகளைத் திருத்தியமைப்பதுதான் நியாயமானது என்பதை நிலைநாட்டுவது போல, ஆந்திர மாநிலம் உருவாகுவதற்குக் காங்கிரஸ் இணங்கியும் இருக்கிறது. ஆந்திர மக்களின் பிடிவாத குணத்தினாலும், பலாத்காரப் போக்கினாலும்தான், ஆந்திர மாநில கோரிக்கைக்கு இணங்க வேண்டிய கட்டாயம் காங்கிரசிற்கு ஏற்பட்டது என்பதை அனைவரும் அறிவர்.

அவ்வாறு இணங்கினதற்கு எந்தச் சூழ்நிலையைக் காரணமாகக் கொள்வதாக இருந்தாலும், மொழி ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, ஆந்திர மாநிலம் உருவாக முடிவாகக் காங்கிரஸ் ஒப்புக்கொண்ட உண்மை மறைந்துவிடாது.

மொழிவழியில் மாநிலங்களைத் திருத்தி அமைப்பதை ஒரு உயர் லட்சியமாகக் கொண்டிருந்த அகில இந்திய காங்கிரஸ், அதிகாரத்தில் அமர்ந்தவுடன், அதை உதறித் தள்ள முன்வந்தது அநீதியாகும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியது, காங்கிரசின் கயமைக் குணத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு.

‘மொழிவழியில் மாநிலங்களைத் திருத்தி அமைப்பது, இந்திய ஒற்றுமையை சீர்குலைத்துவிடும்’ என, தார் கமிஷன் அபாய அறிவிப்பு கொடுத்திருக்கிறது. ‘மொழிவழியில் உருவாகும் துணை தேசியம், இன்னமும் ஆழமாக வேர்விடாத இந்திய தேசியத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிடும்’ எனவும் அந்தத் தார் கமிஷன் விளக்கம் கொடுத்திருக்கிறது.

தார் கமிஷன் நியமனத்திற்கு முன்பாகவே, முன்னாள் ஒப்புக்கொண்ட கொள்கைப்படி மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தியமைக்கக் காங்கிரசிற்கு எண்ணமில்லை. அதன் விளைவுதான் தார் கமிஷன் நியமனம். எனவே, கமிஷன் அறிக்கையும், காங்கிரஸ் கயமைக் கருத்துக்கு ஒத்தூதுவதாக அமைந்திருந்தது.

பல இனம், பல மொழி, பல கலை, பல நாகரீகம் ஆக பல்வேறு பழக்க வழக்கங்களையுடைய மக்களையெல்லாம் ‘இந்தியர்’ எனப் பொதுப் பெயரிட்டு, அவர்கள் வசிக்கும் இப்பரந்த நிலப்பரப்பை ‘இந்தியா’ என்று அழைத்து, அதன் ஆட்சி பீடத்தில் தானே நிலையாக அமர்ந்திருக்க வேண்டுமென்பது அகில இந்தியக் காங்கிரசின் மனோராஜ்யம்! இந்த அரசியல் கருத்தில், தொழில் வளமிக்க வட நாட்டிற்கு வளப்பமானதோர் சந்தையாகத் தென்னாட்டை என்றென்றும் வைத்திருக்க வேண்டுமென்ற வஞ்சக நினைப்பு அடங்கியிருக்கிறது என்பது விளக்கம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மாகாணங்கள் அனைத்தும் தன்னாட்சி உரிமை பெற்று, அந்த உரிமைக்கு ஊறு வராதவகையில் ஒரு இந்தியக் கூட்டாட்சியை உருவாக்குவது; பத்து ஆண்டு காலம் இந்த ஏற்பாடு செயலாற்றப்பட வேண்டும்; அதன் பிறகு இந்தியக் கூட்டாட்சியில் இருப்பதா கூடாதா என்பதை முடிவு கட்டும் உரிமை மாகாணங்களுக்கு இருக்க வேண்டும்; என்ற ஒரு யோசனையை காலஞ்சென்ற ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், பிரிட்டிஷ் சர்க்கார் சார்பில் காங்கிரஸ் தலைவர்களிடம் கூறினார்; முஸ்லிம் லீக் தலைவர்களிடமும் கூறினார். இந்த ஏற்பாட்டிற்கு காலஞ்சென்ற ஜின்னா இசைவு தந்தார்; காங்கிரஸ், இசைய முடியாது என ஒரே அடியாக மறுத்துவிட்டது. இது எதைக் காட்டுகிறது?

தனது முழு விருப்புடன் ஒவ்வொரு மாகாணங்களும், குறிப்பிட்ட சில விஷயங்களில் கூட்டாட்சியில் ஒன்றுபட்டு செயலாற்றுவதும், மற்ற விஷயங்களில் தன்னாட்சி உரிமையுடன் விளங்குவதும், எட்டியாக இருந்தது என்பதோடு, வட நாட்டின் பிடியில் மற்ற மாகாணங்கள் சிக்கிக்கிடக்க வேண்டும் என்ற ஏகாதிபத்திய முனைப்புந்தான், கிரிப்சின், பிரிந்துசெல்லும் உரிமையுடைய கூட்டாட்சி திட்டத்தை ஒப்புக்கொள்வதிலிருந்து காங்கிரசைத் தடுத்தது எனும் உண்மையைத்தான் காட்டுகிறது.

அகில இந்திய காங்கிரசான தாயின் யோக்கியதை இது. மகளான கேரள காங்கிரசின் யோக்கியதை, தாயின் போக்கை பின்தள்ளிவிடுவதாக இருக்கிறது.

தமிழ் மொழி வழங்கும் சில பகுதிகளையும், கன்னட மொழி வழங்கும் சில பகுதிகளையும் மலையாளம் வழங்கும் பகுதிகளுடன் ஒன்றுக்கி ஒரு கேரள மாநிலம் தேவை என்கிறது கேரள காங்கிரஸ். அத்துடன் அதன் நில ஆசை நின்றுவிடவில்லை. நாஞ்சில் தமிழ்ப் பகுதிகளையும் தமிழ் நாட்டுடன் சேரவிடக்கூடாது எனவும் ஊளையிடுகிறது. அரபிக் கடலில் உள்ள இரு தீவுகளையும்கூட கேரள மாநிலத்துடன் இணைத்துக்கொள்ள ஆசைப்படுகிறது.

இந்த அளவு மீறிய கோரிக்கையை ஒப்புக்கொள்வது என்ற நிபந்தனையின்மீதுதான் 1949 ஜூலையில் ஏற்பட்ட திருவாங்கூர்—கொச்சி இணைப்புக்குக் கேரள காங்கிரஸ் உடன்பட்டதாகக் கேரள காங்கிரஸ் கூறுகிறது. அந்த இணைப்பு, தான் கோரும் கேரள மாநிலத்தின் முதற்படி எனவும் அது விளக்குகிறது.

இங்கு நாம் சிந்திக்க வேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்றைக் குறித்துத்தான். அதாவது, கேரள காங்கிரஸ் தீட்டியுள்ள கேரள மாநில அமைப்புக்கு இந்தியப் பேரரசு ‘ஆம்’ போட்ட பிறகுதான், திரு—கொச்சி இணைப்புக்குக் கேரள காங்கிரஸ் உடன்பட்டது என்பதைத்தான் நாம் கருதிப் பார்க்க வேண்டும். இதிலிருந்து என்ன ஏற்படுகிறது?

பிற மொழி வழங்கும் பகுதிகளைக் கொண்ட ஒரு கேரள கதம்பமாநில அமைப்புக்கோரிக்கையை, தம்மிச்சையாகக் கேரள காங்கிரஸ் மட்டுமே தனித்துக் கேட்கவில்லை; அந்தப் பேராசைக்கு இந்தியப் பேரரசும் ஆரம்ப முதலே உடந்தையாக இருந்திருக்கிறது என்ற உண்மை அம்பலமாகிறது. கேரள காங்கிரசின் அசாத்திய கோரிக்கை முதன் முதலாக அதன் மூளையில் பட்டதானு அல்லது இந்தியப் பேரரசின் மூளையில் உதயமாகி, கேரள காங்கிரசின் மூளைக்குக் குடியேறியுள்ளதா என்றுகூட சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது.

கேரள காங்கிரசின் கோரிக்கையைக் குறித்து,

“உண்மையில் அயல்நாடுகளைப் பிடித்து வைத்துக் கொண்டு தங்கள் சுகபோக வாழ்வுக்கு அவற்றைச் சுரண்டுவது அவசியம் என்று எண்ணும் ஏகாதிபத்திய மனோபாவம் அது. அதற்குத் திருவாங்கூர் தமிழர் எள்ளளவும் இடந்தரத் தயாராயில்லை,”

எனக் கண்டித்து, ‘சுதேசமித்திரன்’ எழுதியுள்ளது.

அதன் பருந்துப் பார்வைக்கு, கேரள காங்கிரஸ் குறிப்பிட்டுள்ள திரு-கொச்சி இணைப்பின்போது தந்துள்ள ஒப்புதல் ஏனே தென்படாமல் போய்விட்டது?

‘சுதேசமித்திரன்’ குறிப்பிடுவது போல், கேரள காங்கிரசின் கோரிக்கை அளவுடன், ‘ஏகாதிபத்திய மனோபாவம்’ நின்றுவிடுவதாக இல்லை; இந்தியப் பேரரசினிடமும் அந்த ‘ஏகாதிபத்திய மனோபாவம்’ இருக்கத்தான் இருக்கிறது. ‘ஏகாதிபத்திய மனோபாவம்’ ஒரு கொடிய தொத்து நோய்; இந்தியப் பேரரசினிடமிருந்துதான் அந்தத் தொத்து நோய் கேரள காங்கிரசிற்கும் பரவியிருக்கிறது. தாயைப் போலத் தானே மகள் இருப்பாள்?

‘பிரி-ஆள்’ என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மூலக் கோட்பாடு என்பர். அந்தக் கோட்பாடு ஆரிய நடைமுறை என்பதை வியாசன் உணர்த்துகிறான். ‘பிரி-ஆள்’ என்பது எவருடைய அரசதந்திரமாகவாவது இருக்கட்டும்; ஆனால், இந்தியப் பேரரசு மேற்கொண்டு ஒழுகிவரும் ‘சிறந்த’ முறையாக அது இன்று இருக்கிறது என்பதில், இரண்டு கருத்துக்குத் துளியும் இடமில்லை என்பது திண்ணம்.

மொழிவழி மாநில அமைப்பு கோரிக்கையை மட்டந்தட்ட நினைத்த இந்தியப் பேரரசு, திராவிட இன மக்களிடையில் ஒரு குழப்பத்தை உண்டாக்கி, அவர்கள் ஒற்றுமையைச் சீரழிக்க கங்கணங் கட்டிவிட்டது என்பது விளக்கமாகிறது. அந்தத் திருவிளையாடலின் ஒரு அத்தியாயம்தான் கேரள காங்கிரசின் அசாத்திய மாநில கோரிக்கை. அந்தக் கோரிக்கை வெளியானதும், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கேரள காங்கிரஸ் மீது பாய்கிறார். அப்படிப் பாயக் கூடாது என்பதல்ல நமது விருப்பம். இந்தியப் பேரரசின் சதி வெற்றி பெறுகிறதே என்பதுதான் நமது வருத்தம். அதாவது, மலையாளிகளும், தமிழர்களும் சண்டை பிடித்துக் கொள்ளச் செய்துவிட்டால், அந்தப் போராட்டத்திலேயே அவர்கள் காலமும் கருத்தும் செலவழிந்து கொண்டு இருக்கும்; இந்தியப் பேரரசின் சுரண்டலுக்கு அவர்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்புவது கொஞ்ச காலம் தள்ளிப்போகும் என்ற இந்தியப் பேரரசின் உள்ளக்கிடக்கை வெற்றிகரமாக நிறைவேறுகிறதே என்பதுதான் நமது கவலை.

கேரள காங்கிரசின் கோரிக்கை அசாத்தியமானதுதான். அதைக்காட்டிலும் அசாத்தியமானது அகில இந்திய காங்கிரசின் ‘ஏக இந்தியா’ கோட்பாடு. இரண்டு கோட்பாடும் குலைக்கப்பட வேண்டும். எனவே, கேரள காங்கிரசின் கோட்பாட்டில் ‘ஏகாதிபத்திய மனோபாவம்’ இருப்பதைக் காண்பவர்கள், அகில இந்தியக் காங்கிரஸ் கோட்பாட்டில் அந்த ‘ஏகாதிபத்திய மனோபாவம்’ இருப்பதை ஏன் காணத் தவறுகிறார்கள்? பிறர் கண்டு கூறினும், அவர்களை, ‘பிடி சாபம்’ என்கிறார்களே, அது ஏன்?

அகில இந்தியக் கோட்பாட்டை நாம் கண்டித்து வருவது போலவே, கேரள காங்கிரசின் கோரிக்கையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பேச்சாளர்கள் கவனத்திற்கு!

மேடையில் நின்று பேசும் சொற்பொழிவாளர்கள், தாங்கள் அதிக நேரம் பேசி, மக்களுக்கு வெறுப்பையூட்டுவதைத் தடுக்கவும், பிற பேச்சாளர்களுக்கு அவகாச மளிக்காமல் தாங்களே நின்று அளவுக்கு மீறி பேசுவதையும் தடுக்க விஞ்ஞானிகள் ஒரு புதுவழி கண்டு பிடித்திருக்கிறார்களாம்!

மேடையிலேறி ஒரு பேச்சாளர் சொற்பொழிவாற்ற ஆரம்பித்து இரண்டு நிமிடங்கள் ஆனதும், அவர் எதிரில் மின்சார உதவியால் ஆரஞ்சு வர்ணமுள்ள விளக்கு ஒன்று முதலில் எச்சரிக்கைக்காக எரியுமாம்; அந்த எச்சரிக்கைக்குப் பின் 1 நிமிடம் கழித்து சிகப்பு நிற விளக்கொன்று எரியுமாம்; இந்தச் சிகப்பு வர்ண விளக்கைக் கண்டதும் பேச்சாளர், தமது சொற்பொழிவை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்; இல்லையென்றால் கண்ணீர்ப்புகை வெடி ஒன்று வெடித்து, பேச்சாளரைப் பேசவிடாமற் செய்யுமாம்.

பட்டம் சர்க்காரின் அடக்குமுறைக்கு....

இன்னுமொருவர் பலி!

திரு—தமிழக இணைப்புப் போராட்டம் சம்பந்தமாக, தக்கலை நீதி மன்றத்தில் பதிவாகியிருக்கும் வழக்கொன்றில், திரு—கொச்சி சர்க்காரால் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பலருள் 41-வதாக உள்ள தோழர் முத்துக்கண் பாலையன் என்பவர் நேற்று இயற்கையெய்தினார் எனத் தெரிகிறது.

அவர் கடந்த 17-ந் தேதியன்று தான் ஜாமீனில் சிறையினின்றும் வெளிவந்ததாகவும், அன்றிலிருந்தே உடல் நலக் குறைவால் வருந்தி, 26-ந் தேதியன்று மருத்துவ மனையில் இறந்துவிட்டதாயும் தெரிய வருகிறது.

பாதையோர வியாபாரம்

அமைச்சர் பதில்

சென்னை சைனு பஜார் ரோடின் தென் புறத்திலுள்ள பாதையோர விற்பனைப் பகுதிகளை, அந்தச்சாலையின் வடபுறத்துக்கு மாற்றித் தர வேண்டுமென்று, சென்னை பாதையோர வர்த்தகச் சங்கத்தின் கோரிக்கையை சென்னை அரசாங்கம் கவனிக்குமென்றும், அவர்களுக்கு அவசியமான உதவிகளை அரசாங்கம் செய்ய முன்வருமென்றும் ஆர். எஸ். குமாரசாமி தலைமையில், சென்னை கந்தசாமி கோயில் மெத்தை உற்சவ மண்டபத்தில் நடைபெற்ற சென்னை பாதையோர வர்த்தகர் சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாய, தொழிலமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

பாதையோர வியாபாரிகளிடம் போலீசார் அக்கிரமமாக நடந்து கொள்வதை, அவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தால் நிச்சயமாக நியாயம் கிடைக்கும் என்றும், சென்னை சர்க்கார் மக்கள் சர்க்காரானதால், மக்கள் தங்கள் குறைகளை சர்க்காரிடம் அச்சமின்றிக் கூறவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

சென்னை சைனு பஜாரின் வடபுறம் பாதையோரத்தில் விற்பனைப் பகுதிகளைத் தருவது பற்றி அவர் கூறுகையில், இப்பகுதிகளை வழங்குவதில் சர்க்கார் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது; வடபுறத்திலுள்ள கடைகளுக்குச் சொந்தக்காரர்களான பெரிய வர்த்தகர்களுடைய நலன்களையும், நடைமுறை அனுபவத்தில் வடபுற பாதையோரத்தில் மக்கள் நடமாட்டம் வழக்கமாகவே அதிகமாக இருப்பதால் பாதசாரிகளின் நலன்களையும் கவனிக்க வேண்டியிருக்கிறது; எப்படியும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் காணமுடியும் என்றும், நாணயமான வாழ்வை நடத்தப் பாடுபடும் ஏழை பாதையோர வர்த்தகர்களுக்கு உதவி செய்ய முடியும் என்றும் நம்புகிறேன் என்றும் கூறியிருக்கிறார்.

இங்கிலாந்திற்கு பாக். ஏற்றுமதி

சணல் முதலிடம் பெறுகிறது

கராச்சி, அக். 26—

பாகிஸ்தான், இங்கிலாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களில் சணல்தான் முதல் இடம் பெற்றிருக்கிறது; கடந்த செப்டம்பர் மாதத்தில் மட்டும் பாகிஸ்தான் 17,00,077 பவுன் பெறுமான சணலை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்துள்ளது எனத் தெரிகிறது.

இங்கிலாந்தின் வர்த்தகம் பற்றிய புள்ளி விவரங்களிலிருந்து இத்தகவல் பெறப்பட்டுள்ளது.

பிரிட்டன், பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்து வரும் பொருள்களில், துணி, இரும்பு உருக்கு வாகனங்கள், ஆலை இயந்திரங்கள், ரசாயனப் பொருள்கள் இவையெல்லாம் உள்ளனவாம்.

நேரு கேட்டது கிடைத்துவிட்டது!

பதவியில் நீடிக்க வேண்டுமென கன்னட மக்கள் தீர்ப்பு!

ஹுப்ளி—

பம்பாய் மாகாணத்தில் உள்ள கன்னட மொழி பேசும் பிரதேசங்களில் வாழும் மக்கள், பண்டித நேரு பிரதம மந்திரியாகவும், காங்கிரசின் தலைவராகவும் நீடிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்துள்ளனராம்.

'நவயுகம்' என்ற கன்னட மொழி தினசரி ஒன்று நடத்திய தேர்தல் மூலம் இந்த முடிவு தெரிந்ததாம். இந்தப் பத்திரிகை ஐந்து கேள்விகளைத் தயாரித்து வெளியிட்டு மக்களின் கருத்தை அறிந்தது என்று தெரிகிறது.

கேள்விகளுக்கு, 'ஆமாம்,' அல்லது 'இல்லை' என்ற பதிலைத் தருமாறு கேட்கப்பட்டது; 4,000 பேர் இதற்குப் பதில் அனுப்பினார்கள் என்றும் தெரிகிறது.

காங்கிரசின் தலைவராக நேரு போட்டியிட வேண்டுமென்று 2,521 பேரும், 'கூடாது' என 1,277 பேரும் கூறியுள்ளனர்.

3,757 பேர்களில் 815 பேர் தான் நேரு தற்காலிகமாக பிரதம மந்திரி பதவியிலிருந்து விலக விரும்புகிறார்களாம்!

காங்கிரசின் தலைவராக நீடிப்பதை 2,093 பேர் ஆதரித்தும், 1,607 பேர் எதிர்த்தும் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

பிரதம மந்திரியாக மட்டும் நேரு நீடிப்பதை 2,710 பேர் ஆதரிக்கின்றனர்; 1,289 பேர் 'கூடாது' என்றனராம்!

இறுதியாக, நேரு பிரதமராகவும், காங்கிரசின் தலைவராகவும் ஒரே நேரத்தில் தொடர்ந்து பணியாற்றுவதை 2,554 பேர் ஆதரித்தும், 1,389 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர் என்று தெரிகிறது.

20 பேர் பலி!

கொலம்பியா நாட்டின் வட ஸான்டன்டர் பிரதேசங்களில் ஏற்பட்ட நிலச் சரிவுகளின் விளைவாக 20 பேர் மாண்டு போனார்களென்றும், பலர் காணப்படவில்லையென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், அங்கு ஏற்பட்ட பலத்த மழையினால், பல குழந்தைகள் ஆற்று வெள்ளத்தோடு அடித்துச் செல்லப்பட்டனவாம்.

குறள் நெறி விழா

3-ம் நாள் நிகழ்ச்சி

நுங்கம்பாக்கம் குறள்நெறிக் கழகத்தார் அவினியூ திடலில் நடத்தி வரும் குறள்நெறி விழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சி நேற்று அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் தோழர்கள் திருக்குறளார் வி. முனிசாமி, சங்கரன், சுரதா, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்குப் பல்லாயிரக் கணக்கான தோழர்களும், தாய்மார்களும் கூடியிருந்தனர்.

பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கு, நுங்கம்பாக்கம் தி. மு. கழகத்தவர் கைத்தறி ஆடை போர்த்தினர். மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தார் மலர் மாலை அணிவித்து மகிழ்ந்தனர்.

பொதுச் செயலாளரின் சிறப்புரைக்குப் பின் தலைவர் முடிவுரையுடன் விழா முடிவுற்றது. தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் பண் இசைத்தார்.

டெலிபோன் இலாகா வருமானம் ரூ. 1,71,00,000 நிலுவை

சர்க்கார் இலாகாக்களே பெரும் பாக்கி தர வேண்டுமாம்!

டெலிபோன் உபயோகிக்கும் பலரிடமிருந்து, டெலிபோன் இலாகாவுக்கு வரவேண்டிய பாக்கியாக ரூ. 1,71,00,000 இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த பாக்கித் தொகை ஏழு ஆண்டுகளுக்கு முன் நிலுவையாயிருந்த தொகையைப் போன்று நான்கு மடங்காகும்.

இந்த நிலுவையில் பெரும்பகுதி சர்க்கார் இலாகாக்கள் தரவேண்டியவையாம்.

இந்த நிலுவையை வசூலிக்க, டெலிபோன் இலாகாவினர், நேரடியாகவும்கூட முயற்சித்து வருகின்றனராம்.

பலர், டெலிபோன் பாக்கி தராத காரணத்தால் அவர்களுக்கு டெலிபோன் தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்கிறதாம்.

1947—48-ல் நிலுவை ரூ. 44,00,000; 1953 ஏப்ரலில், இது, ரூ. 1,24,00,000 ஆக உயர்ந்தது. மேலும், 1954 ஏப்ரலில், ஒரு கோடியே எழுபத்தோரு லட்சம் ரூபாய் டெலிபோன் இலாக்காவிற்கு வரவேண்டியிருக்கிறதென்று இலாகாவின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

பாக்கி தராதவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கப்படுகிறதாம்.

உலகத்திலேயே முதல் புத்த பல்கலைக் கழகம்

இலங்கையில் துவங்க முயற்சி

இலங்கையில் உள்ள முக்கிய கல்வித் துறையினர் ஒருங்கு கூடி, புத்த பல்கலைக் கழகமொன்றைத் துவங்குவது என முடிவு கட்டியுள்ளனர். அதற்கான ஆரம்ப ஏற்பாடுகளும் முடிவடைந்துவிட்டன. இத்துறையில், உலகத்திலேயே இதுதான் முதல் கழகம் எனக் கூறப்படுகிறது.

புத்தமதக் கோட்பாடுகளையும், அதன் தொடர்புடைய கருத்துக்களையும் கற்பிப்பதுதான் இப்பல்கலைக் கழகத்தின் மூல நோக்கமாகும்.

புத்தமத ஆதரவில் நடைபெற்று வரும் கல்விக் கூடங்கள் விரைவில் கூடி திட்டத்தை ஆராய இருக்கிறது. மேற்படி பல்கலைக் கழகத்திற்கு இலங்கை சர்க்கார் பொருள் உதவியும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் கோஷ்டிச் சண்டை!

'பெப்சு' மாநிலத்தில் வெடிக்கிறது!

பெப்சு மாநில காங்கிரஸ் கட்சியின் செயற் குழுவில் ஏற்பட்டுள்ள பிளவு குறித்து, காங்கிரஸ் தலைமைப்பீடம் விவாதிக்கவிருக்கிறதாம்.

மாநில காங்கிரசில் வெடித்துள்ள பிளவினால், அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டிற்கு பெப்சுவிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக வருகிற நவம்பர் 15-ல் நடைபெறவிருந்த தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்று காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றனவாம்.

மாநில காங்கிரஸ் தலைவரான அவ்தார் சிங் என்பவர், தேர்தலை ஒரு மாதகாலம் ஒத்திப்போடுமாறும், அப்படிச் செய்தால்தான் செயற் குழுவில் உள்ள பிளவுகளை தன்னால் சரிப்படுத்தக் கூடும் என்றும் தலைமைப்பீடத்திற்கு எழுதியுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

தேர்தல் அதிகாரிகளை நியமனம் செய்வதில் ஊழல்கள் நடைபெற்றிருப்பதாக பெப்சு காங்கிரஸ் கட்சியின் இரு செயலாளர்களும் காங்கிரஸ் தலைமைப்பீடத்திற்குக் கடிதம் வேறு எழுதியுள்ளார்களாம்.

இதற்கிடையில் இந்த இரண்டு கோஷ்டிகளையும் ஒன்று சேர்க்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றனவாம்.

முதலாளிகளின் முதலைக் கண்ணீர்!

சௌராஷ்டிர ஆலைகளில் இரண்டாண்டுகளாக பல லட்ச ரூபாய் நஷ்டமாம்!

தொழிலாளரின் திறமையின்மையும் நஷ்டத்திற்குக் காரணமாம்!

சௌராஷ்டிர மாநிலத்தில் உள்ள நெசவாலைத் தொழிலில் கடந்த இரண்டாண்டுகளில் ரூ. 66,00,000 நஷ்டமேற்பட்டிருப்பதாக ஷாந்திலால் மங்கள் தாஸ் என்ற சௌராஷ்டிர நெசவாலை முதலாளிகள் சங்கத் தலைவர் கூறினார்.

ஏற்கனவே இரண்டு 'யூனிட்'டுகள் மூடப்பட்டுவிட்டதாயும், மற்றுமோர் 'யூனிட்'டும் மூடப்பட வேண்டிய அளவுக்கு அங்கு உற்பத்தி இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த நிலை நீண்ட நாட்களுக்கு நீடிக்கக்கூடாது. ஆலைகளுக்குப் பொருள் உதவி செய்வதின் மூலம், ஆலைகள் சிக்கனமுடன் நடைபெற வேண்டும்; அல்லது, ஏற்கனவே மூடப்பட்ட இரண்டு ஆலைகளைப் போன்று மூடப்பட்டுவிட வேண்டும்.

"சௌராஷ்டிரத்தில் 9 நெசவாலைகள் இருக்கின்றன. அவைகளில் முடக்கப்பட்டுள்ள முதலீடு சுமார் ரூ. 2,81,88,600. அவற்றில் 1,54,776கதிர்கள்இயங்குகின்றன; 3,985 தறிகள் உள்ளன; 74,000 பேல் பருத்தி செலவாகிறது; 61,000 பேல் துணியும், 10,000 பேல் நூலும், ஆண்டொன்றுக்கு அவற்றில் உற்பத்தியாகின்றன.

"அந்த ஆலைகள் சுமார் 11,000 பேருக்கு நேரடியாக வேலை தருகின்றன," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்போது நஷ்டத்திற்கு காரணமாக, ஷாந்திலால் கூறியதாவது:—

பருத்தி, நிலக்கரி முதலிய பொருள்களை சௌராஷ்டிரத்திற்கு வரவழைப்பதற்கு போக்குவரத்துச் செலவு அதிகமாகிறது; ஆனால் அதே நேரத்தில் இங்கு உற்பத்தியான பொருள்கள் குறைவான விலைக்கே விற்கின்றன; அதே போன்று, நல்ல பயிற்சி பெற்ற, திறமையான தொழிலாளர்கள் இல்லாமையால், தொழிலாளரின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது."

மலபார் மாவட்டத் தேர்தல்

மண் கவ்வியது காங்கிரஸ்!

மலபார் மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சி அதிகமான இடங்களைப் பிடித்துள்ளது.

48 இடங்களைக் கொண்டுள்ள அந்த மாவட்டத்தில், கம்யூனிஸ்டு 18; காங்கிரஸ் 15; முஸ்லிம் லீக் 8; சுயேச்சை 6; பி.-சோ. கட்சி 1—என கட்சிகள் நிலவரமுள்ளது.

சுயேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 பேரும் கம்யூனிஸ்டு ஆதரவாளர்களாகும்.

இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி 45 பேர்களையும், கம்யூனிஸ்டு கட்சி 36 பேர்களையும், பி.-சோ. கட்சி 21 பேர்களையும், முஸ்லிம் லீக் 17 பேர்களையும், ஜன சங்க் 2 பேர்களையும் அபேட்சகர்களாக நிறுத்தியிருந்தன.

கம்யூனிஸ்டு ஆதிக்கம் பெற்ற வட மலபாரிலுள்ள 22 ஸ்தானங்களில் 10 இடங்களை கம்யூனிஸ்டுகளும், 7 இடங்களை காங்கிரசும், முஸ்லிம் லீக் 1-ம், பி.—சோ.-க்கள் 1-ம் சுயேச்சைகள் 3 ஸ்தானங்களையும் பிடித்திருக்கின்றனர்.

மாணவர்களே அமைக்கும் ஆரம்பப் பள்ளி

கார்வார் தாலுகாவிலுள்ள காஞஸ்கெரி கிராமத்தில் ஒரு ஆரம்பப் பள்ளியமைக்கும் வேலையை உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 50 மாணவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்; கடந்த அக். 17-ந் தேதியிலிருந்து, அப்பணியை அவர்கள் மேற்கொண்டுவிட்டனர்.

அவர்கள் மேலும், தங்களுக்குக் கிடைக்கிற ஓய்வு நேரத்தில், கிராமங்களைச் சுத்தப்படுத்துதல், கூட்டாக நூல் நூற்றல் போன்ற சமூக சேவைகளிலும் ஈடுபட்டுள்ளனராம்.

நன்றி அறிவிப்பு!

எழில் மிகுந்த ஈழத்தில் பதினைந்து நாட்கள் தங்கியிருக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அதன் இயற்கை வளமும் செயற்கை வளமும் என் கண்ணைக் கவர்ந்தன; அங்குள்ள தமிழ் மக்கள் காட்டிய அன்பு என் உள்ளத்தைக் கவர்ந்தது; அவர்களின் தமிழ் ஆர்வம் என் கருத்தைக் கவர்ந்தது; அங்குச் செழித்தோங்கிவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி என் உணர்ச்சியைக் கவர்ந்தது; ஆங்காங்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பு என் ஊக்கத்தைக் கவர்ந்தது.

நான் ஈழ நாட்டிற்கு வருகை தரவேண்டியதை வற்புறுத்தி எனக்கு ஊக்கமளித்த கெழுதகை நண்பர் எஸ். சேதுராமன் அவர்களுக்கும், நான் ஈழத்தில் இருந்தகாலை என் உடன் இருந்து எனக்கு எல்லாவித உதவிகளையும் பெருந்தகைமையோடு செய்துவந்த நண்பர்கள் ஆதி. கருப்பையா, மாணிக்கம், சீனு, 'சுதந்திரன்' ஆசிரியர் சிவநாயகம், வேலாயுதம் ஆகியோர்க்கும் என் நன்றி உரித்தாகுக!

என்னை ஈழத்திற்கு வரவழைத்துக் கொழும்பு தமிழ்ச்சங்க விழாவில் நான் கலந்துகொள்ள வேண்டி அரும்பாடுபட்டதோடல்லாமல், எனக்குப் பேருதவியாகப் பெரும்பணிகள் புரிந்த தமிழ்ச் சங்கப் பொதுச்செயலாளர் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக!

கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் தோழர் வே. அ. கந்தையா, துணைத் தலைவர்கள் தோழர்கள் மதியாபரணம், சோ. நடராசன் ஆகியோர்க்கும் ஏனைய உறுப்பினர்க்கும் என் நன்றி உரித்தாகுக!

திராவிட முன்னேற்றக் கழகத்தை நல்ல அமைப்பு முறையோடு வளர்த்து, சிறப்பான முறையில் செயலாற்றி, என்னைப் பெருமைப்படுத்தும் வகையில் வரவேற்கக் காரணமாக இருந்த தோழர்கள் இரா. அதி. மணி, பீர்முகம்மது, கதிரவன், தம்பித்துரை, ஆங்காங்குள்ள கிளைக்கழகச் செயலாளர்கள், மத்தியக் கழக—கிளைக்கழகச் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர்க்கு என் நன்றி உரித்தாகுக!

எனக்கு வரவேற்பு அளித்து, ஆங்காங்கு என்னைப் பாராட்டிய தி. மு. க. கிளைக் கழகங்களுக்கும், தி. மு. க.-வைச் சார்ந்த சங்கங்களுக்கும், தமிழ்ச் சங்கங்களுக்கும், தனிப்பட்ட நண்பர்களுக்கும், பொதுமக்களுக்கும் என் நன்றி உரித்தாகுக!

நான் இலங்கைக்குச் செல்லும்போதும், திரும்பி வரும்போதும் சென்னை விமான நிலையத்திற்கு வந்திருந்து, நான் பூரிப்படையும் வகையில், என்னை வழியனுப்பியும் வரவேற்றும் எனக்குப் பெருமையளித்த நண்பர்களுக்கும், சென்னை மாவட்ட தி. மு. கழகத்திற்கும், கிளைக் கழகங்களுக்கும், தனிப்பட்ட சங்கங்களுக்கும் என் நன்றி உரித்தாகுக!

சென்னை,
29-10-54

வணக்கம்,
இரா. நெடுஞ்செழியன்

'பஜகோவிந்த மகிமை'

பாதிரியார் தரும் விளக்கம்!

"கால நிலையில் ஒரு மாற்றம் தேவை என்று பரம பிதாவிடம் நாம் முறையிடுவது சரியானதுதான்: ஆனால் 'அவன்' சித்தம் நமது கோரிக்கைக்கு முரண்பட்டதாக, எதிர்மறையாக இருந்தால் நாம், 'அவன்' மீது கோபங் கொள்ளக் கூடாது,"

என்று யார்க் 'ஆர்ச் பிஷப்' டாக்டர் கார்பட் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அறுவடை நாட்களில், காலநிலை பற்றி எழுகிற முரண்பட்ட வாக்குவாதங்கள் குறித்து அவர் கூறுகையில் குறிப்பிட்டதாவது:—

"கால நிலை மாற்றம் வேண்டுமென்பதற்காக பிரார்த்திப்பதன் மூலம், கடவுள்தான் மனிதனையும், இயற்கையையும் ஆட்டிப்படைக்கும் ஆற்றல் கொண்டவன் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். எனவே, நாம், காலநிலை மாற வேண்டும் என பிரார்த்திப்பது சரியானதேயாகும்," என்றார்.

காமராசர் தரும் உறுதிமொழி!

சென்ற சில வார காலமாக கிராமாந்திரங்கள் தோறும் சுற்றுப் பயணம் செய்துவரும் சென்னை முதன் மந்திரி காமராசர், குடியாத்தம் தொகுதியில் தம்மை சென்னை சட்ட சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தமைக்கு அத்தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கையில், குடியாத்தம் தாலுகாவில் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு சர்க்கரை ஆலைகளை நிறுவ சர்க்கார் ஆராயுமென்று உறுதி கூறியுள்ளார்.

அடக்குமுறையின் கரம் மேலும் வலுப்பட்டுள்ளது!

போலீசாரின் கொடுமைகளுக்குப் புதிய பாராட்டு தயாராகிறது!

கிருபளானியிடம் தி. த. நா. காங்கிரஸ் தூது

துப்பாக்கிப் பிரயோக விசாரணை பற்றி மக்கள் சபை உறுப்பினர் ரசாக் அறிக்கை

"திரு—கொச்சியில் தற்போது நிலவும் சூழ்நிலையில், தமிழர்களின் மீது தேசியப் போர் ஒன்று நடத்தப்படு வதாகவே சாதாரண மலையாளி ஒருவரின் உணர்ச்சி கள் இருக்கின்றன."

என்று, தற்போது தமிழர்கள் மீது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நடைபெறும் பொது நீதிமன்ற விசாரணை பற்றி தான் விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் திரு. த. நா. காங்கிரஸ் பிரமுகரும், இந்தியப் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. ஏ. ரசாக் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:—

"சென்ற ஆகஸ்டு திங்கள் 11-ம் நாள், தென் திருவாங்கூரில், குற்றம் எதும் புரியாது, நிராயுதபாணிகளாய் நின்ற தமிழ் மக்கள் மீது காரணம் எதுமின்றி கண்மூடித்தனமாக நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம், திருவாங்கூர்-கொச்சியின் முதலமைச்சரால், முன்கூட்டியே திட்டமிடப்பட்ட முடிவுகளை ஒட்டியே நடைபெற்றதாகும். முக்கியமாக ஜூலை 12-ம் நாளன்றும், ஆகஸ்டு 8-ம் நாளன்றும் பேசிய முதலமைச்சரின் பேச்சுக்களிலிருந்து இதைத் தெளிவாக அறியலாம்.

இப்பேச்சுக்களின் கருத்து தமிழர்களின் மீது போர் தொடுக்கச் செய்யப்பட்ட பிரகடனத்திற்கு ஒப்பாகும்.

அதனால்தான், 'தென் திருவாங்கூரில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி, நேர்மையான பொது நீதிமன்ற விசாரணை தேவை,' என்று திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் கோரியது; ஆனால், நிகழ்ச்சிகள் நடைபெற்ற மாவட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றிருந்த அதே மாவட்ட மாஜிஸ்திரேட்டையே கொண்டு விசாரணை நடத்துமாறு செய்துவிட்ட பட்டம் தாணு பிள்ளை தன்னைத் தானே திருப்திப்படுத்திக் கொண்டார்.

அதன்படியே, போலீசாரின் நடத்தையை 'சரி' என்று கூறும் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று உருவாக்கித் தரப்பட்டது.

இதை விட சிறந்த அறிக்கை நிகழ்ச்சிகளை உருவாக்கிய நாட்டின் போலீஸ் இன்ஸ்பெக்டர் - ஜெனரலால் கூட, போலீசாரின் கொடுமைகளை அனுமதித்துத் தயாரித்திருக்க முடியாது.

ஆனால், திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசுக்கும், தமிழ் மக்களுக்கும், இந்த அறிக்கை, 'கொலையாளியின் அறிக்கை' யாகவே இருந்தது.

பிரஜா - சோஷலிஸ்டு கட்சியின் தேசிய நிர்வாகக் குழு இந்த அறிக்கையில் சிறப்பு எதுவும் இல்லாமை கண்டு, திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் 'உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு, பொது நீதி மன்ற விசாரணை நடத்த முதல் அமைச்சர் ஏற்பாடு செய்யவேண்டு'மென்ற கோரிக்கையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியது.

பத்திரிகைச் செய்திகளை உண்மையென்று கருதிப்பார்த்தால், பி.-சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழு, 'வெளி மாநிலம் ஒன்றிலிருந்து, இக்காரியத்திற்கென்று உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவரின் சேவைகளைப் பெற வேண்டுமென்று வற்புறுத்தியது;' எனலாம்.

ஆனால், பி.-சோ. கட்சியின் முதல் அமைச்சரான பட்டம் தாணுப்பிள்ளை வேறுவிதமாகக் கருதினார். தான் விரும்பியபடி, தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், முன் காலத்தில் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் சர். சி. பி. இராம சாமி அய்யரால் விரும்பி பயன்படுத்தப்பட்டவருமான திரு—கொச்சி உயர் நீதிமன்ற நீதிபதி சங்கரனை நியமித்தார்.

இன்று திரு—கொச்சியில் காணப்படும் சூழ்நிலையில், தமிழர்கள் மீது தேசியப் போர் ஒன்று நடத்தப்படுவதாகவே சாதாரண மலையாளியின் உணர்ச்சி இருக்கிறது. மலையாளிகளிடையே இந்த உணர்ச்சி நிலவும் போது, சர்க்காரின் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள எந்த மலையாளியிடமிருந்தும் நீதியைப் பெற முடியாது என்பதை கடந்த மூன்று மாத காலமாக தங்களுக்குக் கிடைத்துள்ள அனுபவத்திலிருந்து தமிழர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, தற்போது நீதிபதி சங்கரனால் நடத்தப்படும் விசாரணையைப் பகிஷ்கரிப்பது என திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் சரியான காரணங்களுடன் தீர்மானித்தது.

இதன் விளைவாக, அடக்குமுறையின் கொடிய கரங்கள் முன்பைக் காட்டிலும் இப்போது அதிக வலிவுடன் மக்களைத் தாக்குகின்றன. அதிகாரிகளும், போலீசாரும், மக்களுக்கு எதிராக ஏவி விடப்பட்டிருக்கிறார்கள்,

அவர்கள், மக்களை சித்திரவதை செய்கின்றனர்; பயமுறுத்தியும், கட்டாயப்படுத்தியும், கொடிய வழக்குகள் தொடுப்பதாக உருட்டு விழிகளால் மிரட்டியும், போலீசார் மக்களிடமிருந்து சாட்சியங்களைச் சேகரிக்கின்றனர்; விசாரணைக் கமிஷனரிடம் எப்படி சாட்சியம் கொடுக்க வேண்டுமென்பதையும் தாங்களே சொல்லிக் கொடுக்கின்றனர்.

மீண்டும் பித்தலாட்டத்துடன், நாடக பாணியில், போலீசாரின் கொடுமைகளைப் புகழும் சாட்சியமொன்றும் தயாராகிறது.

நிலைமைகள் இவ்வாறு உள்ள போது, பிரஜா—சோஷலிஸ்டு கட்சியின் தலைமைப் பீடத்தினர், இந்தப் பிரச்சினையில், உண்மையிலேயே, தனது கருத்தில் நாட்டம் கொண்டுள்ளதா என்பதைத் தெளிவர, நேரடியாகத் தெரிந்து கொள்வது தனது தலையாய கடமை என்று திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் கருதுகிறது.

அதனை அறியும் பொருட்டு, திரு. த. நா. கா., புதுடில்லியில், ஆச்சார்ய கிருபாளனியைச் சந்திக்கக் குழு ஒன்றை அனுப்புகிறது. இக்குழுவில் திரு. த. நா. காங்கிரசின் தொண்டர் படைத் தலைவர் காசிராமன், அகில இந்திய காங்கிரஸ் குழு உறுப்பினர் துரைசாமி, போலீசாரின் கொடுமைகளுக்கு அதிகம் உள்ளான தேவிகுளத்தைச் சேர்ந்த எஸ். ஐ. பி. டபிள்யூ. யூனியன் செயலாளர் ஆர். குப்புசாமி ஆகியோர் உறுப்பினர்களாவார்கள்.

எகிப்து ஜனாதிபதி இராஜினாமா?

முஸ்லிம் சகோதரக் கழகம் கலைக்கப்பட்டது!

நாடு முழுமையும் 500 பேர் கைது!

எகிப்தின் ஜனாதிபதி ஜெனரல் நகிப் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார் என்று கெய்ரோவில் வதந்திகள் உலவுகின்றனவாம்!

எகிப்து சர்க்கார், முஸ்லிம் சகோதர உறவுக் கழகம் என்னும் மதவெறி பிடித்த அமைப்பைக் கலைத்துவிட்டதாக தெரிவித்திருக்கிறது.

கெய்ரோவிலுள்ள இக்கட்சியின் தலைமை அலுவலகத்தையும், நாடு முழுமையும் உள்ள அதன் 200 கிளைகளையும் போலீசார் மூடி 'சீல்' வைத்துவிட்டனராம்.

செய்வாயன்று எகிப்து பிரதமர் நாசரைக் கொலை செய்ய முயற்சிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை 500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறினார்.

முஸ்லிம் சகோதர உறவுக் கழகத்தின் சொத்துக்களை சர்க்கார் பறிமுதல் செய்துள்ளனர். இக்கழகத்திற்குப் பல மில்லியன் எகிப்திய பவுன்கள் நிதி இருந்ததாம் இந்த நிதி முழுமையும் மருத்துவ—சமூக விஷயங்களுக்கு உதவ அளிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

தோழர் நாடிமுத்துவின் சவ அடக்கம்

26—10—54 இரவு 8-50 மணிக்கு பட்டுக்கோட்டையிலுள்ள தமது இல்லத்தில் இயற்கை எய்திய தோழர் வி. நாடிமுத்து அவர்களின் சவ ஊர்வலமும், அடக்கமும் மறுநாள் மாலை 5 மணிக்கு மேல் நடைபெற்றது. இந்நாட்டில், அவரது சேவையைப் பாராட்டி, பல கட்சித் தோழர்களும் பேசினர்.

பாக். மந்திரி சபையில் சேர்ந்தது ஏன்?

கான் சாகிப் தரும் விளக்கம்

பாகிஸ்தான் புதிய மந்திரி சபையில், மந்திரி பதவியேற்ற டாக்டர் கான் சாகிபிடம் காஷ்மீர் விவகார இலாகா ஒப்படைக்கப்பட்டுள்ளதாம். கவர்னர்-ஜெனரல் குலாம் முகமதின் யோசனையின் பேரில்தான், அவர் காஷ்மீர் விவகார மந்திரியாக நியமிக்கப்பட்டாரென்றும் தெரிகிறது.

தான் மந்திரி பதவியேற்றது பற்றிகான்சாகிப் குறிப்பிடுகையில், "மக்களுக்காகப் பணிபுரியவே, எந்த நிபந்தனையுமின்றி தாம் பதவி ஏற்றுக்கொண்டதாக"க் கூறியிருக்கிறார்.

"புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த மந்திரி சபை கூட்டு மந்திரி சபை அல்லவென்றாலும் திறமை மிக்க, பரந்த அடிப்படையில் அமர்ந்துள்ள ஒரு மந்திரிசபையே;" என்று பிரதம மந்திரி முகமதலி தமது மந்திரி சபையைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு; அந்த மந்திரி சபை, கவர்னர்-ஜெனரலுக்கோ; அல்லது தமக்கோ பொறுப்பு வாய்ந்ததாயிராமல், நாட்டிற்குத்தான் அது பொறுப்பு வாய்ந்ததென்று கூறியிருக்கிறார்.

புதிய மந்திரி சபையில் இரண்டு இராணுவ அதிகாரிகள் சேர்க்கப்பட்டிருப்பதால், இராணுவ ஆட்சி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுவதை உள்நாட்டு அமைச்சர் மேஜர் ஜெனரல் இஸ்கிந்தர் மிர்ஸா மறுத்தார்.

முகமதலி தரும் விளக்கம்:

"7 ஆண்டுகளாகியும் அரசியல் சட்டம் தயாரிக்கப்பட முடியாததாலும், அடிப்படைக் கொள்கையில் கிழக்கு வங்கம், பாகிஸ்தான், பஞ்சாப் நாடுகளிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டதாலும், மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்கள்,பிரதிநிதித்துவம் சம்பந்தப்பட்ட தகராறுகள், மாநில எல்லைகள், மொழிப் பிரச்சினை ஆகியவற்றால் தான் பாகிஸ்தான் அமைச்சரவை கலைக்கப்பட்டுவிட்டது. "பலதிறப்பட்ட அரசியல் கட்சிகளிடையேஏற்பட்டுள்ளமோதுதல்களுக்கு ஒரு முடிவு காணும் நோக்கத்துடனேயே நாட்டில் நெருக்கடிப் பிரகடனமும் செய்யப்பட்டது" என்றார்.

அரிசன ஆலய நுழைவு வெறும்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்று நோன்பு பூண்டார். தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டதாக, அரசியல் சட்டத்தில் ஒரு விதி நுழைக்கப்பட்டு விட்டதாலேயே, தீண்டாமை ஒழிந்துவிட்டதாக பலர் நம்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

"வருண ஏற்பாடு, ஷைட்டில் வகுப்பினரின் முன்னேற்ற ஆர்வத்தையே கொன்றுவிட்டது. அரசாங்க விடத்தில் தாழ்வு மனப்போக்கையும், அவர்களிடம், அவ்வருண தருமம் திணித்து வைத்திருக்கிறது."

"வருண தர்மம் உள்ள வரை, இந்தத் தீண்டாமையும் நிலைத்திருக்கும். எனவே, தீண்டாமை உயிர் பெற்றிருப்பதற்கு ஊற்றுக் காலாக உள்ள வருண தர்மத்தைத் தகர்த்தெறிய, பெரும் போர் தொடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது."

அரிசனர்களுடைய தேவைகளையும், குறைபாடுகளையும் விளக்கமாகக் குறிப்பிட்டு, மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

மேலும் 1,530 ஓராசிரியர் பள்ளிகள்!

படித்தும், வேலையிலாமல் திண்டாடுவோரின் குறைகளை நீக்க மத்திய சர்க்கார் மேற்கொள்ளும் திட்டப்படி, சென்னை சர்க்கார், 1,530 அதிகப்படியான ஓராசிரியர் பள்ளிகள் திறக்க அனுமதியளித்திருக்கின்றனர்.

இப்பாடசாலைகள், 500 - க்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள பள்ளிகளில்லாத இடங்களில் திறக்கப்படும். இதனால் வேலையில்லாதிருப்பவர்களில் 1,530 - பேருக்கு வேலை கிடைக்கும்.

இதற்கு முன்னதாக ஏற்கனவே சென்னை சர்க்கார், 1,270 பள்ளிகளையும், 200 பள்ளிகளில் உயர்தர ஆரம்ப வகுப்புகளை ஆரம்பிக்கவும் அனுமதி அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் மின்சாரம்

சென்னையிலிருந்து புதுவைக்கு வெகு சீக்கிரத்தில் மின்சார வினியோகம் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

புதுச்சேரிக்கு, இதற்கு முன்பு மேட்டூரிலிருந்து மின்சாரம் வினியோகிக்கப்பட்டு வந்து, சில மாதங்களுக்கு முன்னர்தான் அது நிறுத்தப்பட்டது என்பது நினைவிலிருக்கலாம்.

சென்னை 18-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

31—10—54 காலை 9 மணிக்கு சென்னை 18-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில் செயற் குழு கூடும். அதுபோது நான்காம் ஆண்டு விழா, வரவு-செலவு பரிசீலனை, தொடர்ந்து உறுப்பினர் கட்டணம் செலுத்தாத செயற் குழு உறுப்பினர்களைப் பற்றியும், மற்றும் கழக ஆக்க வேலைகள் குறித்தும் விவாதித்து முடிவு செய்யப்படும்.

சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

31—10—54 காலை 9 மணிக்கு சேலம், லீபஜார், ஈ. ஆர். கிருஷ்ணன் மண்டியில், சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது நகரக் கிளை ஆண்டு விழா நடத்தும் விஷயமாக ஆலோசிக்கப்படும்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

31—10—54 காலை 9-30 மணிக்கு சென்னை, முத்தியாலுப் பேட்டை, எண். 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் கா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில், 'நேருவும்-செஞ்சீனமும்' எனும் பொருள் பற்றி பல தோழர்கள் பேசுவர்.

* * *

31—10—54 காலை 9-30 மணிக்கு சென்னை 14-வது வட்டம் அறிஞர் மன்றச் சார்பில் நடைபெறும் சொற் பயிற்சிக் கூட்டத்தில், 'ஆத்திகமா - நாத்திகமா' என்பது பற்றி பல தோழர்கள் பேசுவர்.

சிறப்பு மாநாடு

சென்னை மாகாண அகில இந்திய ஆர். எம். எஸ். ஊழியர் சங்கம் மெயில் கார்டுகள்—நான்காம் வகுப்பு சிறப்பு மாநாடு 31-10-54 அன்று, சென்னை, தங்கசாலைத் தெரு, எண் 36-ல் நடைபெறும். காலை 9 முதல் 12 மணி வரை பிரதிநிதிகளின் கூட்டமும், மாலை 5 மணிக்குத் தோழர் எஸ். குருசாமி, எம். பி. தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெறும். தோழர்கள் வீ. வீராசாமி, எம்.பி., ஏ. எஸ். இராஜன், இரா. சக்கரவர்த்தி, ஏ. சுவாமிநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மீனவர் துயரம்

26—10—54 மாலை 4 மணிக்கு திரு. க. பொன்னுசாமி தலைமையில் மீனவர் ஐக்கிய முன்னணி செயற்குழுவின் அவசரக் கூட்டம், சைனா பஜார் 264 எண் இல்லத்தில் நடைபெற்றபோது, சென்னை சுற்றுவட்ட மீன் பிடிப்போர் நிலைமையையும், குறைகளையும் மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கவும், அது சம்பந்தமாக டெல்லி மக்கள் சபை உறுப்பினர்களைக் காணவும் ஐக்கிய முன்னணியின் சார்பில் மேற்படி முன்னணியின் தலைவர் என். ஜீவரத்தினம் அவர்களை டில்லிக்கு அனுப்புவது என தீர்மானிக்கப்பட்டு, 27—10—54-ல் அவர் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஜனநாயகப் பண்பு!

"ஜப்பானிய யுத்த நஷ்டஈடு பற்றிய பர்மா அரசாங்கத்தின் ஒப்பந்தத்தை விமர்சிப்பவர்களுக்கும், கண்டிப்பவர்களுக்கும், தங்கள் கருத்தை அறிவிக்கத் தேவையான ஒலிபரப்பு வசதிகள், மற்றும் அவை போன்ற எல்லா வசதிகளும் செய்து தர பர்மிய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது," என்று பிரதமர் யூ-நு பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.